முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 108/2023

2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 10 ம் நாள் புதன் கிழமை வாதி தரப்பு சாட்சியம்.

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிகளின் படி வள்ளியூர் முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி திருமதி.A.அன்னலெட்சுமி,M.L., அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | பொன்னையா தேவர் | **சமயம்** | : | -- |
| **த/பெ** | : | சுடலையாண்டி தேவர் | **வயது** | : | 75 |
| **கிராமம்** | : | -- | **தொழில்** | : | -- |
| **வட்டம்** | : | -- | | : | |

**வா.சா.1: 2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) இந்த வழக்கு லெட்சுமணன் என்ற குமார், வட்டாட்சியர் இராதாபுரம், தமிழ்நாடு அரசு ஆகியோர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதிக்கு எதிராக நீங்கள் என்ன பரிகாரம் கேட்கிறீர்கள் என்றால் பட்டாவை எங்கள் பெயருக்கு மாற்ற கோரி கேட்கிறேன். உங்களிடம் காட்டப்படும் ஆவணம் வா.சா.ஆ.7, 2 ம் பிரதிவாதிக்கு பட்டா பெயர் மாற்ற கோரி நான் அளித்தத விண்ணப்பம் என்றால் சரிதான். மேற்கண்ட மனு மீது என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்பதற்கு உங்களிடம் எதாவது ஆதாரம் உள்ளதா என்றால் ஆதாரம் உள்ளது தேட வேண்டும். மேற்படி உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு எதாவது செய்தீர்களா என்றால் இல்லை.

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.06.10 18:13:36 +0530

2) பட்டா பாஸ்போர்ட் விதிகளின் படி, நீங்கள் மேலும் வருவாய் துறையில் 3 மேல் முறையீடு செய்ய முடியும், அந்த சட்ட விதிகளை பின்பற்றாமல் நேரடியாக சிவில் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடி வழக்கு தாக்கல் செய்வது பட்டா பாஸ் புத்தகம் சட்டம் பிரிவு 14 ன் படி தடைசெய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதனால் நீங்கள் மேல் முறையீடு செய்யாமல் சமூக நீதிமன்றத்தை நாடி பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள், 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக நீங்கள் கேட்கும் பரிகாரம் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல. 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக உங்கள் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கானது மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்க கேட்டு சரியென்று ஒப்புக் கொண்டு கையெழுத்து செய்தார்

ANNALAKSHMI

Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.06.10 18:13:43 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்